மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2021 ஐப்பசி 26 வியாழக்கிழமை (11 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 348

# வட.-கிழக்கு பிரச்சினைக்கு தேர்தல்களுக்கு முன் தீர்வு

## ஜனாதிபதி டி. பி. அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 11

அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களுக்கு முன்னர் வடக்கு – கிழக்குப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். உரிய தீர்வை அரசு காணும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

— ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசிய போதே அவர் முன் கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு–கிழக்கு பிரச்சினை குறித்து அரசாங்கம் எதிர் வரும் காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் — அவர் கூறினார்.

1994 ஆம் வருட தேர்தலுக்கு ஆளும் கட்சியினர் தயாராக இருக்க வேண்டும் என்றும் —

தேர்தலுக்கு முன்னர் எம். பிக்கள் தத்தமது தொகுதிகளுக்குச் சென்று மக்களின் பொதுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ-எ-6)

மூச்சந்தி பரவி



தேர்தல் வருகுதெல்லே...... அதற்கேற்ற மாதிரித்தானே வரவு — செலவுத் திட்டமும் இருக்கும்.....!

## அமைச்சர்களின் எதிர்ப்பால் அனுரா பதவியேற்பு தாமதம்!

அனுரா பண்டாரநாயக்கா அமைச்சராக பதவியேற்பது தாமதமாகும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிதாகக் கட்சியில் சேர்ந்த ஒவ்வொருவரையும் அவர் சேர்ந்தவுடன் அமைச்சராக்கும் முறைக்கு மூத்த அமைச்சர்கள் பலர் நேற்று முன்தினம் நடைபெற்ற அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்றும் —

அதனைத் தொடர்ந்து அனுரா அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்வதில் காலதாமதம் ஏற்படும் என்றும் கொழும்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

எனினும் — அனுராவுக்கு அமைச்சர் பதவி வழங்குவதற்கு அரச நாடாளுமன்றம் அங்கீகாரமளித்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அனுரா ஜனாதிபதி முன்னிலையில் இன்று தமது அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என்று ஏற்கனவே செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

(ஒ-எ-6)

## தீபாவளி கலகலப்பு

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு யாழ்நகரில் வர்த்தக நிலையங்கள் கலகலப்படைந்துள்ளன. உடுபுடைவைகள் வாங்குவதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேபோல் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் சந்தைகளில் புத்தாடைகள், உடுபுடைவை வியாபாரம் களைகட்டியுள்ளதாக எமது செய்யாளர்கள் அறிவிக்கின்றனர்.

(ஒ-17-117)

மீளக்குடியமர்வு என்ற போர்வையில்

## அகதி முகாம்களிலிருந்து தமிழர் விரட்டியடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

மட்டக்களப்பு, ஏறாவூர்ப் பகுதியில் மீளக்குடியமர்த்துவது எனக்கூறி அகதி முகாம்களில் இருந்து தமிழர்கள் விரட்டப்பட்டுள்ளனர்.

அரச அதிகாரிகளினால் முகாம்களில் இருந்து அகற்றப்பட்ட இந்த அகதிகள் குடியமர எதுவித வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை இவர்களுக்கான நிவாரணமும் அரச அதிகாரிகளினால் நிறுத்தப்பட்டுள்ளது.

தொழில் செய்வதற்கும் இவர்களுக்கு படை அதிகாரிகளினால் அனுமதி வழங்கப்படவில்லை. சொந்த இடங்களில் அவர்கள் சென்று குடியேற அங்கு வீடுகள் இல்லை. வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

— இவ்வாறு மட்டக்களப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜனாதிபதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகின்றது

கொழும்பு, நவ. 11

ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு வழங்கப்பட்டு வரும் பாதுகாப்பு மேலும் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ஜனாதிபதி பங்குபற்றும் நிகழ்ச்சிகள், விழாக்கள் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேலும் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன.

ஜனாதிபதி பங்குபற்றும் விழாக்கள் இடம்பெறும் பிரதேசம், அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னரே ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படுகின்றது.

பாதுகாப்புப் பிரிவினர் அந்தப் பிரதேசத்தை சோதித்து சல்லடை போட்டு தேடுதல் நடத்தி, திருப்தி தெரிவித்த பின்னரே விழா ஏற்பாடுகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றது.

அண்மையில் இப்பகமுவ என்ற இடத்தில் ஏற்பூட்டு விழா ஒன்றில் கலந்து கொண்டு ஜனாதிபதி வயலில் இறங்கி ஏர் பிடித்து உழுது விழாவை ஆரம்பித்து வைக்க ஏற்பாடாகியிருந்தது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு அணியைச் சேர்ந்த விசேட பொலிஸ் பிரிவு ஒன்று விழா நடைபெறவிருந்த வயலுக்கு, விழாவிற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன் வந்திறங்கியது. விழா நடைபெறவிருந்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. தூதரகப் பணிகள்: வடக்கில் இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 11

வடபகுதியில் தமது பணிகள் அனைத்தையும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளதாக அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் அறிவித்துள்ளது.

தூதரகத்தின் இந்த முடிவினைத் தெரிவிக்கும் பத்திரிகை அறிக்கை ஒன்று நேற்றுக் கொழும்பில் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையின் பிரதி யாழ்ப்பாணத்திலும் வெளியானது.

கடந்த ஒக்டோபர் முப்பதாம் திகதி மடுவில் நடந்த பாரதூரமான சம்பவத்தினைத் தொடர்ந்து எழுந்த பாதுகாப்பு நிலைமையினாலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அன்றைய சம்பவம் ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பமான தொடர் ஆர்ப்பாட்டங்களில் ஆறாவது என்றும் —

சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்ட ஒக்டோபர் முப்பதாம் திகதிய ஆர்ப்பாட்டத்தில் தூதரகத்தின் நான்கு அதிகாரிகளின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது என்றும் —

இனிமேலும் இது போன்ற ஆர்ப்பாட்டங்கள் நடக்கக் கூடும் என்றும் — அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் பலத்த மழை; சுவர் விழுந்து 24 பேர் பலி

### 52 மீனவர்களைக் காணவில்லை

சென்னை, நவ. 11

தமிழகத்தில் பல இடங்களிலும் பலத்த மழை பெய்து வருகிறது. மோசமாக பெய்து வரும் மழை காரணமாக சுவர் இடிந்து விழுந்ததில் சுமார் 24 பேர் உயிரிழந்துவிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இராமநாதபுரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 52 மீனவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை.

மேற்கு மற்றும் மத்திய வங்கக்கடலில் மாலைதீவு அருகே குறைந்த காற்றழுத்த தாழமுக்கமண்டலம் உருவாகியுள்ளது என்றும் —

இதன் காரணமாக தமிழ்நாட்டில் பல இடங்களில் தொடர்ந்து பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆராய்ச்சி நிலையம் நேற்று அறிவித்தது.

தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் கரையோரங்களில் [illegible] முதல் 55 கிலோமீற்றர் வரை பலத்த காற்று வீசக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள துறைமுகங்கள் அனைத்திலும் எச்சரிக்கை கொடி ஏற்றப்பட்டுள்ளது.

மீனவர்களை கடலுக்குச் செல்லவேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-எ-3)

## ஒய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் நவம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று செயலகத்தால் தபாலில் சேர்க்கப்பட்டன.

ஓய்வூதிய கொடுப்பனவுக்கான காசோலைகளும் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டன.

(ஒ-3-100)

# விசேட அதிரடிப்படையினர் எண்ணிக்கை அதிகரிப்பு

### மேலும் ஆயிரம் பேர் கடந்த மாதம் சேர்ப்பு

விசேட அதிரடிப் படையினரின் எண்ணிக்கை மேலும் சுமார் ஆயிரம் பேரினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் புதிதாக ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டனர். இதன் காரணமாக எட்டரை கோடி ரூபாவை மேலதிகச் செலவாக பாதுகாப்பு அமைச்சு எதிர் நோக்கியுள்ளது.

புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கு சம்பளம், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் மற்றும் தேவைகளுக்காக 5 கோடியே 66 லட்சம் ரூபாவும், சீருடைகள் போக்குவரத்து என்பனவற்றுக்கு 2 கோடியே 79 லட்சம் ரூபாவும் தேவையென கணக்கிடப்பட்டுள்ளது.

(ஒ-9)

1985 ஜனவரிக்கு முன்னர்

# ஓய்வுபெற்ற ஊழியருக்கு நிவாரணம் கிடைக்கும்

### பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு

கொழும்பு, நவ. 11

நிதி அமைச்சரும் நிதி ராஜாங்க அமைச்சருமான ஹரோல்ட் ஹேரத் 1994 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தார்.

வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ 1985ஆம் ஆண்டுஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற அரச ஊழியருக்கு நிவாரணம் வழங்கப்படும். அதாவது ஓய்வூதிய முரண்பாடு நீக்கப்படும். இதற்காக 18 கோடி ரூபா ஒதுக்கப்படும். இவர்களுக்கு அவர்களின் அடிப்படைச் சம்பளத்துக்கு ஏற்ப கொடுப்பனவுகள் வழங்கப்

( 3ஆம் பக்கம் பார்க்க)

## படகுச் சேவை இன்று நடக்கும்

யாழ்ப்பாணம், நவ. 11

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஒ 3)

## நாடாளுமன்ற 'கலரி'யில் ராஜதந்திரிகள்

கொழும்பு, நவ. 11

நாடாளுமன்றத்தில் நேற்று நிதி மற்றும் நிதி ராஜாங்க அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் வரவு – செலவுத் திட்ட அறிக்கையை வாசித்த போது, வெளிநாட்டு ராஜதந்திரிகள் பலரும் 'கலரி'யில் அமர்ந்திருந்து அவதானித்தனர்.

(ஒ-3)

# பட்ஜெட் உரையை நேற்று எதிரணியினர் பகிஷ்கரிப்பு

கொழும்பு, நவ. 11

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட (பட்ஜெட்) உரையை சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய சோஷலிச அணி எம். பிக்கள் நேற்று பகிஷ்கரித்தனர்

ரெலோ எம். பிக்களான திவ்யநாதன், கருணாகரன், அயூப், தாஹூத் ஆகியோர் சபையில் சமுகமளித்திருந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஏனைய எம். பிக்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்களும் சபையில் சமுகமளித்திருக்கவில்லை.

வெளிநடப்புச் செய்வதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா விடுத்த அறிக்கை ஒன்றில் –

வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் சமர்ப்பிக்கும் சம்பிரதாய முறை மீறப்படுவதாகத் தெரிவித்தார்.

இக்காரணத்தை முன்னிட்டே எதிர்க்கட்சி எம். பிக்கள் நேற்று நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்தனர்.

(ஒ-எ)

# வணிகருக்கு கொண்டாட்டம் வறியவருக்கு திண்டாட்டம்

### பட்ஜெட் குறித்து பி. பி. ஸி.

வணிகர்களுக்குக் கொண்டாட்டம்; வறியவர்களுக்குத் திண்டாட்டம்.

விஜேதுங்கா அரசின் புதிய வரவு செலவுத் திட்டத்தை பி. பி. ஸி. முன் கண்டவாறு வர்ணித்தது.

மோட்டார் கார்கள், சைக்கிள்கள் மீதான இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் வாகனச் சந்தையில் ஜப்பானுக்குள்ள பிடி இறுக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஆடை தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்க வசதிகள் நீக்கப்பட்டுள்ளன.

இது மேலைநாட்டுக் கண்டனத்தை மனதில் வைத்தே செய்யப்பட்டுள்ளது என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

(ஒ-எ-6)

# மட்டக்களப்புப் பகுதியில் கடும் பாதுகாப்பு ஏற்பாடு

### நகரப்பகுதியில் அடிக்கடி தேடுதல்

மட்டக்களப்பு; நவ. 11

அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெற உள்ள உள்ளுராட்சி தேர்தல்களுக்கு முன்னோடியாக மட்டக்களப்பு பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகர்ப்பகுதி திடீர் திடீரென சுற்றி வளைப்புகளுக்கு உள்ளாக்கப்படுவதுடன், தேடுதல் நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

பொலிஸார் வீடு வீடாகச் சென்று வாக்காளர் இடாப்பில் பெயர் இல்லாது தங்கியிருப்போரின் விவரங்களைச் சேகரித்து வருகின்றார்கள்.

நகரின் ஒதுக்குப் புறப்பகுதியில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நகருக்குள் வரும் அனைவரும் அந்த இடத்தில் சைக்கிளை வைத்த பின் நகருக்குள் நடந்து செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர்.

(ஒ-9)

# வாதுவ வருகையில் தாமதம்

யாழ்ப்பாணம், நவ. 11

திருகோணமலையில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால், அங்கு தரித்து நிற்கும் 'வாதுவ' கப்பலில் மா ஏற்றும் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

நாளை பருத்தித்துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்பட்ட இக் கப்பல் மா ஏற்றுவதில் உள்ள தாமதத்தால், அடுத்த வாரஆரம்பத்திலேயே பருத்தித்துறைக்கு வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்தும் மழை பெய்யுமானால் ''வாதுவ'' வருவது மேலும் தாமதமாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

# 3,500 பரல் ம.எண்ணெய் கோமாரி கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், நவ. 11

மூவாயிரத்து ஐந்நூறு பரல் மண்ணெண்ணெயுடன் 'கோமாரி' கப்பல் அடுத்த வார ஆரம்பத்தில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ள இக்கப்பலில் மண்ணெண்ணெய் பரல்களுடன், தேங்காய் எண்ணெய் மற்றும் தார் ஆகியனவும் ஏற்றப்படுவதாகவும் —

அடுத்த ஞாயிறு அல்லது திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு இக்கப்பல் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் — நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஒருதொகுதி தபால் பொதிகளையும் இக்கப்பலில் ஏற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பொமனேரியன் நாய்க்குட்டிகள் (மண்ணிறம் கறுப்பு கலந்தது, பூச்சி நீக்கியது) விற்பனைக்குண்டு. தொடர்பு: E. அன்ரனி, 392, பிரதான வீதி, (பஸ்தியன் சந்தி) யாழ்ப்பாணம். (27989)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஒழுங்கை திருநெல்வேலி வடக்கில் சந்தைக்கு மிக அருகாமையில் சகல வசதியும் கொண்ட இரண்டு பரப்பு காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வனிதாதேவி விவேகானந்தம், செம்பாட்டுலேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (27931)

### தோத்திரங்கள்

அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர் பாடிய ''ஸ்ரீநாராயணப் பெருமான் 108 திருத்தல தோத்திரங்கள்'' [ஆழ்வார்கள் பாடிய தோத்திரங்களும் அடங்கிய] நூல் விற்பனையாகிறது. விலை 60/- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-6337)

### O/L வினா – விடை

உயர் கல்விச்சேவை நிலைய கடந்தகால வினாவிடையும், அப்பியாசக் கொப்பிகளும் மலிவு விலையில் விற்பனையாகின்றன. அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (சி-6533)

### மீண்டும் சனி மாற்றம்

31-5-95 வரை கும்பராசியிலே சனி சஞ்சரிக்கும்; வியாழன், சனி மாற்றம், பாடசாலை உபகரணங்கள், தீபாவளி வெளியீடுகள் விற்பனையாகின்றன. ஸ்ரீவாலாம்பிகை புத்தகசாலை, பன்றிக்கோட்டுப்பிள்ளையார் முன்பாக, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (27972)

---

## வட. கோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமிகள் தேவஸ்தானம்

கோப்பாய்.

## இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

நிறைந்த தமிழ் அறிவும், சைவசித்தாந்தப் பேரறிவும் மிக்க

### திருமுருக கிருபானந்தவாரியார்

சுவாமிகள்

07-11-93 அன்று சிவப்பேறு அடைந்து விட்டார். குன்றாத இறை பக்தியினால் அறுபது ஆண்டுகள் இறைபுகழ் பேசியும், பாடியும் பாரதத்தில் மட்டுமன்றி உலகெலாம் வாழ்கின்ற சைவ மக்களைக் கவர்ந்து அருள் உணர்வு ஊட்டிய பெருந்தகையின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. சுவாமிகளின் ஆன்மா ஈடேற்றம் அடைய பிரார்த்திப்போம்!

– [illegible]டைக்கால பரிபாலன சபை.

(27986)

---

## வட.மராட்சி புற்றுநோய்த் தடுப்பு சங்கம்

நடத்தும்

## முடிவில் ஓர் ஆரம்பம்

(நாடகம்)

கதை, வசனம், நெறியாள்கை:
✲ கலைமாறன் திரு. எஸ். யோகேந்திரா அவர்கள்

இசை: அருணா

காலம்: **12-11-1993** வெள்ளி
பிற்பகல் 3-30 மணி
மாணவர்களுக்கான காட்சி

**14-11-1993** ஞாயிறு
பிற்பகல் 3-30 மணி
பெரியோர்களுக்கான காட்சி

இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்

✲ பிரவேசம்: மாணவர் ரூபா **5-00**
பெரியோர் ரூபா **10-00**

(27974)

---

வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.

## முக்கிய அறிவித்தல்

1994ஆம் ஆண்டில் எமது பிரதேசசபைப் பகுதியில் (சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி) உணவகம் (தேநீர்க்கடை, சாப்பாட்டுக் கடை) பாண்சாலை என்பன நடத்தும் உரிமையாளர்கள் அதற்கான அனுமதியை 20 - 11 - 1993 ஆம் திகதிக்கு முன் எமது அலுவலகத்தில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விவரங்களை உப அலுவலகங்களில் அறிந்து கொள்ளலாம். எக்காரணம் கொண்டும் எமது அனுமதிப் பத்திரம் இன்றி வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.

ருபினி கனகரட்னம்,
விசேட ஆணையாளர்,
வலி. மேற்கு பிரதேசசபை.

வலி. மேற்கு பிரதேசசபை அலுவலகம்,
சுழிபுரம். 02-11-1993 [சி-6348]

---

## BIRTHDAY REMEMBRANCE AND ACKNOWLEDGEMENT

### PRIMROSE PATHMADEVI SABAPATHYPILLAI (RANEE)

Fondly Remembered on Her Birthday Today (11 – 11 – 1993) by her beloved Sisters, Brothers, Sisters – in – law, Nieces and Nephews.

## FOR EVER WITH THE LORD

The Family members of the late **PRIMROSE PATHMADEVI SABAPATHYPILLAI**, sincerely thank all Friends, Relations and well wishers who attended the funeral, sent messages of condolence, helped in numerous ways, shared in their sorrow and also attended the **SERVICE OF THANKSGIVING**. They thank sincerely the Doctors, Nursing Staff and other Staff of **THE JAFFNA PRIVATE HOSPITAL, ANAIPANTHY**, who attended on her during her illness.

They also thank the **CLERGY** of the J. D. C. S. I. for having conducted the **FUNERAL SERVICE** and the **SERVICE OF THANKSGIVING**.

A. R. SABAPATHYPILLAI.
(Brother)

"Primrose Cot",
Chavakachcheri, (C-6344)

---

தேவனுக்கு மகிமை உண்டாவதாக
''தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.''
(யோவேல் 2:21)

## சுவிசேஷ நற்செய்தியுடன் தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகள்

இடம்: இலங்கை பெந்தகொஸ்தே சபை
111, கண்டி வீதி, கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

திகதி: 1993 நவம்பர் 11ஆம் திகதி வியாழன் முதல் 14ஆம் திகதி ஞாயிறு வரை

நேரம்: தினமும் மாலை 4 மணிக்கு

மற்றைய கூட்டங்கள்:
★ காலை 7-00 மணிக்கு காத்திருப்புக் கூட்டம்
★ ஞாயிறு காலை 9-00 மணிக்கு காலை ஆராதனையும், பரிசுத்த இராப்போசனக் கூட்டமும்

''நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்'' (யோவான் 11:40)

வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்
● இலவச உட்பிரவேசம்
காணிக்கை சேர்க்கப்பட மாட்டா

★ யாவரையும் அன்புடன் அழைக்கிறோம் ★

இலங்கை பெந்தெகொஸ்தே சபை,
111, கண்டி வீதி, கண்டிக்குளி.

[27995]

---

உ
சிவமயம்

## வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்

(வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்)

## கந்த ஷஷ்டி விரதகால விசேட நிகழ்ச்சிகள்

14–11–1993 முதல் 19–11–1993 வரை

தினமும் காலை 7 மணிக்கு சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூசையும்,

மாலை 3-30 மணிக்கு சாயரட்சைப் பூசையும்,
மாலை 5-00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும்

அதனைத் தொடர்ந்து ஷண்முகார்ச்சனையும் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து விசேட நிகழ்ச்சியாக மாலை 6—7 மணி வரை தினமும் விசேட சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

**14 – 11 – 1993** ஞாயிற்றுக்கிழமை
''கந்தன் கருணை''
திரு. கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்,
(தலைவர், இந்து நாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்)

**15 – 11 – 1993** திங்கட்கிழமை
''விரதங்கள் - சிறப்பாக முருக விரதம்''
திருமதி நா. செல்வநாயகம் M.A.,
(முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

**16 – 11 – 1993** செவ்வாய்க்கிழமை
''மாலோன் மருகன்''
திரு. எஸ். சிவலிங்கராஜா M. A.
(முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்)

**17 – 11 – 1993** புதன்கிழமை
''முருக வழிபாடு''
திரு. மா. வேதநாதன் M. A.,
(முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

**18 – 11 – 1993** வியாழக்கிழமை
''தெள்ளு தமிழ் பாடல் தெளிவோன்''
திரு. த. சிவகுமாரன்.
(ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி)

**19 – 11 – 1993** வெள்ளிக்கிழமை
''வேலை விடவல பெருமானே''
வாகீச கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன் M. A.

**20 – 11 – 1993** சனிக்கிழமை
மாலை 5 மணி திருக்கல்யாணம்

இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தர்மகர்த்தா,
வை. கநதப்பச்செட்டியார்.

(27937)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

### செல்வி யசோதா செல்வராஜா

மலர்வு: **29–06–1976** உதிர்வு: **28–09–1993**

அன்புத் தோழியே!
நீ படித்த பாடசாலை, உன் இழப்பால் உருகிநிற்குது
நீ இருந்த இடத்தில் உன் நிழலாடுது
எம் நெஞ்சில் உன்முகம் ஆடுது
எம்மிடையே உன்னைத் தேடுகிறார்கள்
நாம் உன்னை எங்கே தேடுவது?

இவருடன் உதிர்ந்த தந்தை, தங்கை உட்பட 19 பேரின் ஆத்ம சாந்திக்காக நித்தம் பிரார்த்திக்கும்;

1995 உயர்தர மாணவர்,
யா- மகளிர் மகா வித்தியாலயம்,
சாவகச்சேரி.

(சி-6347)

---

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

நடத்தும்

# "3ஆவது" வதிவிட வேளாண்மைப் போட்டி

## 1993/1994 யாழ். மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பேரினவாத ஒடுக்கு முறைகளில் இருந்து எம் மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வழி வகுத்துள்ளது.

இப்பணியில் செயற்பட்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன் தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர் கொண்டுள்ள பாரிய பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகிறது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் இரண்டாவது முறையாக 1993/94 காலப் பகுதியில் யாழ். குடாநாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடவைக்கவும் வதிவிட வேளாண்மைப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமது வீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள 4 பரப்புக்கு உட்பட்ட காணியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு பரிசில்களையும் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டிக்கொள்கிறது.

### போட்டிகளுக்கான நிபந்தனைகள்:-

01. வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர்ச் செய்கையை கவர்ச்சிகரமாக அமைத்தல்.
02. 10அடி நீளம் 3 அடி அகலமும் ஆன பாத்திகளில் உள்நாட்டு மரக்கறிப் பயிர்களான வெண்டி, மிளகாய், புசிற்றாவோ, பயிற்றை, கத்தரி, புடோல், பாகல், தக்காளி, பீர்க்கு, அவரை போன்றவையும் மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களான போஞ்சி, முள்ளங்கி, பூக்கோவா, பீற்றுட், கரட் போன்றவையும் இவற்றுள் குறைந்தது (5) ஐந்து வகை பயிர் இனங்களில் (3) மூன்று உள்நாட்டு மரக்கறி வகைகளும் மேல் நாட்டு மரக்கறி வகைகளில் இரண்டும் (2) செய்கை பண்ணப்பட்டு இருத்தல் வேண்டும்.
    அத்துடன் மரவள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு வகைப் பயிர்களில் ஒன்று முக்கியமாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
    சோளம், கம்பு, இறுங்கு போன்ற தானியப் பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக பயிரிடப்பட்டிருத்தல் வேண்டும்.
03. 10 அடி நீளமும் 3 அடி அகலமுமான பாத்திகளில் இலைவகைகள் மரக்கறிப் பயிர்களான பொன்னாங்காணி, முளைக்கீரை, பசளி, கங்குன் கீரை, வல்லாரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தூதுவளை, சண்டி, முல்லை, முசுட்டை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு இன மாதல் இருத்தல் வேண்டும்.
04. மஞ்சள், இஞ்சி, பெருஞ்சீரகம், வெந்தயம், மல்லி, கருவேற்பிலை, றம்பை போன்ற இனங்களில் மூன்று (3 நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்)
05. பழ மரங்களான பப்பாசி, வாழை, மரக்கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, பலா, எலுமிச்சை ஆகியவற்றுள் 4 மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
06. பயனுள்ள மரங்களான தென்னை ஒன்று அல்லது கமுகு இரண்டு ஆகியவை புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
07. கூட்டெரு, குழி முறையிலோ, குவியல் முறையிலோ மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
08. தேனீ வளர்த்தல்:-
    குறைந்தது ஓர் பெட்டியிலாவது அல்லது மரக் கொட்டுகளிலாவது வளர்ப்பில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
09. கோழி வளர்த்தல்:-
    குறைந்தது (10) பத்து கோழிகள் (கூடு அமைப்பு) கனகூழ முறையில் வளர்த்தல் வேண்டும்.
10. தாரா ஒரு சோடி வளர்த்தல் வேண்டும். அல்லது அதற்குப் பதிலாக 5 கோழிகள் கூடுதலாக வளர்க்க வேண்டும்.
11. பசுமாடு ஒன்று அல்லது மறி ஆடு ஒன்று வளர்க்கப்படல் வேண்டும். இவை இரண்டையும் வளர்ப்பவர்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.
12. முயல் குறைந்தது ஒரு சோடி வளர்க்கப்படல் வேண்டும்.
13. விலங்கு தீவனமாக புல்லினம், இப்பில் இப்பில், முள் முருங்கை, சீமைக் கிழுவை என்பன இருத்தல் வேண்டும்.
14. பதிவேடு பேணல்
    மரக்கறி பயிர், கால்நடை வளர்ப்பிற்கானவை தனித்தனி பேணப்படல் வேண்டும்.

குறிப்பு:

விண்ணப்பப் படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்டச் செயலகம், கோட்டச் செயலகங்கள், கிராமிய உற்பத்திக் குழு-வட்டத் தொடர்பாளர்கள் அலுவலகங்களில் பெற்று பூரணப்படுத்தி 15-11-1993 ஆம் திகதி திங்கட்கிழமை நேரடியாகவோ, அல்லது கடித மூலமாகவோ மேற்குறித்த அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிகமாகத் தேவைப்படும் விவரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட கோட்ட, வட்ட அலுவலகங்களிலும் கமநல சேவைத் திணைக்களத்திலும், விவசாய போதனாசிரியர்களிடமும், அரசசார்பற்ற நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மரக்கறி விதைகள் விண்ணப்பதாரிகளுக்கான பயிற்சிக் கூட்டத்தில் வைத்து இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் கலந்து கொள்வோர் 15-11-1993 தொடக்கம் 15 – 12 – 1993 வரையுள்ள காலப் பகுதிக்குட்பட்ட நாட்களில் அனைத்துப் பயிர்களும் நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

### போட்டிகள் பார்வையிடும் காலம்:

முதலாம் கட்ட பார்வையிடுதல்
**01 – 01 – 1994** தொடக்கம் **20 – 01 – 1994** வரையுள்ள காலப் பகுதி.

இரண்டாம் கட்ட பார்வையிடுதல்:
**01 – 02 – 1994** தொடக்கம் **15 – 02 – 1994** வரை.

இறுதிக் கட்ட பார்வையிடல்:
**20 – 02 – 1994** தொடக்கம் **28 – 02 – 1994** வரை.

(சி-6343)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## நல்ல தருணம்

தத்தமது நாடுகளில் இனப்பிரச்சினைகளால் எழும் யுத்தங்களை, அந்தந்த நாடுகள் தீர்த்துக்கொள்ள வேண்டும். தவறினால் அவற்றை ஐக்கிய நாடுகள் சபையே தலையிட்டுத் தீர்த்துவைக்கும்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு. பூட்ரஸ் பூட்ரஸ் காலி இவ்வாறு எச்சரித்திருக்கிறார். உலக நாடுகள் பலவற்றில் இப்போது உள்நாட்டு யுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் அனேகமான யுத்தங்கள் இனப்பிரச்சினை காரணமாகவே மூண்டிருக்கின்றன.

கெடுபிடி யுத்த காலத்தில் உலக நாடுகளில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தங்களில் இரு வல்லரசுகளும் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டிருந்தன.

ஆனால் இப்போது — வல்லரசுப் போட்டி இல்லாத காலத்தில் — உள்நாட்டு யுத்தங்களுக்கு இனப்பிரச்சினைகளே மூலகாரணங்களாக அமைந்துள்ளன. உள்நாட்டு யுத்தங்களை, அவை அந்தந்த நாட்டுடன் சம்பந்தப்பட்டவைதானே என்று பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

எனவே ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகத்தின் எச்சரிக்கை அர்த்தமுள்ளது. அது வெறும் பேச்சோடு அமையாமல் செயல் வடிவம் பெறவேண்டும். அப்போதுதான் உள்நாட்டு யுத்தங்கள் முடிவுக்கு வந்து உலகில் அமைதி பிறக்கும். அடக்குமுறைக்கு உட்பட்டு விடுதலைக்காகப் போராடும் இனங்களுக்கு விடிவு பிறக்கும்.

ஐ. நா. செயலாளர் நாயகத்தின் எச்சரிக்கையை இலங்கையோடு பொருத்திப் பார்ப்பது அவசியமாகிறது.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஐ. நா. சபையின் மத்தியஸ்தம் கோரப்பட வேண்டும் என்று நான்கு நோபல் பரிசு அறிஞர்கள் சமர்ப்பித்த சமாதான யோசனையும் இங்கே நினைவிற் கொள்ளப்படத்தக்கது. அதனை கொழும்பு அரசாங்கம் அடியோடு நிராகரித்து, இங்கே இருப்பது உள்நாட்டுப் பிரச்சினை என்றும், அதனை அரசே தீர்த்துக் கொள்ளும் என்றும் திமிருடன் கூறியது.

ஆனால் இப்போது ஐ. நா. சபைச் செயலாளர் நாயகம் விடுத்திருக்கும் எச்சரிக்கை, கொழும்பு அரசாங்கத்துக்கு உள்ளூர குலைநடுக்கத்தைக் கொடுக்கும். இனப்பிரச்சினையில் ஐ. நா. தலையீட்டை, வெளியார் தலையீட்டை அனுமதிப்பதில்லை என்ற அதன் நிலைப்பாடு ஆட்டம் காணப் போகிறது.

இனப்பிரச்சினையைப் பயங்கரவாதமாகக் காட்டி அதனை ஒழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் விஜேதுங்காவும் பூட்ரஸ் பூட்ரஸ் காலியின் எச்சரிக்கையைக் கேட்டு தலைசுற்றிச் சாய்ந்தாலும் சாயலாம். ஐ. நா. தலையீட்டைத் தவிர்ப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு விழுந்தடித்துக் கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. காலி கொடுத்த குளிகை கொழும்பு அரசின் நிலைப்பாட்டை மாற்றவும் கூடும்.

இல்லையென்று ஐ. நா.வே தலையிடும் நிலை வந்தாலும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமையும், தாயகக் கோட்பாடும் அங்கீகரிக்கப்பட வேண்டும். எந்தத் தீர்வுத்திட்டத்திலும் அந்த இரு அம்சங்களும் முதன்மைப்படுத்தப்படவேண்டும்.

ஈழத்தமிழர்கள் தமது இழந்த உரிமைகளை மீட்டெடுக்க வாய்ப்பான காலம் உருவாகிறது. அதனைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பூட்ரஸ் காலியின் எச்சரிக்கையை ஆதாரமாக்கி தங்கள் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற விவேகத்துடனும் சாதுரியத்துடனும் உழைக்க வேண்டும். வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழரும் சுயநிர்ணய உரிமையின் அவசியம் ஐ. நா. மனதில் பதிவதற்கு உழைக்க வேண்டும்.

---

நாடாளுமன்றில் தீ

## திட்டமிடப்பட்ட சதிச்செயலாம்

இஸ்லாமாபாத், நவ 11

பாகிஸ்தானில் நாடாளுமன்றக் கட்டடம் தீப்பற்றிய சம்பவம் திட்டமிடப்பட்ட சதிச்செயல் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய ஆதரவு விஷமிகள் இச்சம்பவத்தின் பின்னால் இருப்பதாக முன்னாள் சபாநாயகர் ஜனாப் அயூப் குற்றஞ் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தினால் நாடாளுமன்றத்தின் சபா மண்டபம் பலத்த சேதம் அடைந்தது.

எதிர்வரும் சனிக்கிழமை புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றம் கூடவிருக்கிறது. (ஒ-எ)

## ஹெக்மதியார் கொலை முயற்சி முறியடிப்பு

காபூல், நவ. 11

ஆப்கனிஸ்தானின் பிரதமர் ஹெக்மதியாரைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட சதி முறியடிக்கப்பட்டதாக அவருக்கு ஆதரவான போராளிக்குழு நேற்று அறிவித்தது.

இரு தினங்களுக்கு முன்னர் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள பிரதமர் வந்த போது அப்பகுதியில் நாசகார வெடிப்பொருள்களுடன் காணப்பட்ட மர்ம மனிதன் ஒருவன் கைது செய்யப்பட்டான் என்றும் அப்போராளிக்குழு தெரிவித்துள்ளது. (ஒ-எ)

## அரபாத்தின் காவலர் காயமுற்றார்

லண்டன், நவ. 10

பலஸ்தீன விடுதலை இயக்க தலைவர் யாசீர் அரபாத்தின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் நேற்று இனந்தெரியாத நபர் ஒருவரால் சுடப்பட்டு படுகாயமடைந்தார்.

லெபனானில் சைடன் நகரில் அவர் தனது காருக்கு அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது இச்சம்பவம் இடம் பெற்றது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-த)

## தேசிய தொழிற் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், நவ. 11

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடத்தப்படும் தேசிய தொழிற் பரீட்சைகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

வாகன பொறியியல், பொருத்துநர் (பொது), மரவேலை, மேசன்வேலை, மின்கம்பி இணைப்பாளர், நீர்க்குழாய் பொருத்துனர் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு பரீட்சைகள் நடைபெறுகின்றன.

இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்போர் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி உத்தியோகத்தரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் சந்தித்து விண்ணப்பங்களைக் கையளிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-க-162)

## சைவசமய தீட்சை

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். சைவபரிபாலன சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சைவசமய தீட்சை வழங்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

கரணவாய் சிவஸ்ரீ கை திருஞானசம்பந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற உள்ள இவ்வைபவத்தில் ஏழு வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் தீட்சை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-162)

★ ★ ★

ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலையில் அமைந்துள்ள ஞான வைரவர் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு சைவசமய தீட்சை வைபவம் நடைபெறும். ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் இது நடைபெறுகிறது. (க)

---

ஜனாதிபதிக்கு அதிக அதிகாரம் வழங்கும்

# ரஷ்ய புதிய அரசமைப்பு சர்வசன வாக்கெடுப்புக்கு

## யெல்ட்சின் அறிவிப்பு

மாஸ்கோ, நவ. 11

ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சின் புதியதோர் அரசியல் அமைப்பின் நகலை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி யெல்ட்சினுக்கு ஏகப்பட்ட அதிகாரத்தை வழங்கும் இந்த அரசியல் அமைப்பு அடுத்த மாதம் சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்படும்.

தொலைக் காட்சியில் ஜனாதிபதி யெல்ட்சின் உரை நிகழ்த்தி, மக்கள் இந்த அரசியல் அமைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் புதிய அரசியல் அமைப்பு பலம் வாய்ந்த ஆயுதமாக அமையும் எனவும் —

ரஷ்யா அதன் கம்யூனிஸக் கடந்த காலத்தை முற்றாக முடித்துக் கொள்வதை அது உறுதிப்படுத்தும் எனவும் — அவர் கூறினார்.

ஜனாதிபதி யெல்ட்சின் தாம் தமது பதவிக் காலம் முடியும் வரை, அதாவது 1996 ஆம் ஆண்டு வரை, பதவியில் இருப்பார் என்று அண்மையில் அறிவித்திருந்தார்.

கம்யூனிஸ பழைமைவாதிகளுடன் சமீபத்தில் நெருக்கடி ஏற்பட்ட சமயம் ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு நடத்தப்போவதாக யெல்ட்சின் உறுதி அளித்திருந்தது தெரிந்ததே.

## இரு மாணவருக்கு தங்கப் பதக்கங்கள்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இன்று நடைபெறும் பரிசளிப்பு விழாவில் இருமாணவர்களுக்கு கௌரவ பரிசில்களாக தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

1993 ஆம் ஆண்டு நடந்த பண்ணிசை, பாஓதுதல் போட்டிகளில் பாடசாலை, கொத்தணி, கோட்ட, மாவட்ட மட்டங்களில் முதல் இடம் பெற்ற மாணவர்களுக்கு அமரர் ஈ. எஸ். பேரம்பலம், அமரர் குமாரசாமி நடராசா ஆகியோரின் ஞாபகார்த்த தங்கப் பதக்கங்களும், வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அவர்களின் தங்கப் பதக்கமும் வழங்கப்படும். (ஒ 3)

---

## மகாவலி வடக்கே வந்தால் இன ஒற்றுமை ஏற்படும்

### தமிழ் எம். பி. கூறுகிறார்

'மகாவலி நீரை வடக்கே கொண்டு செல்வோம் என முன்னர் கூறப்பட்டது. அது செயலுருவம் பெறவில்லை. வெலிஓயாவில் (மணலாறு) சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி அரசாங்கம் சிக்கலை உருவாக்கியுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவரத்தினம் நாடாளுமன்றத்தில் பேசுகையில் இப்படி கூறினார்.

யாழ்ப்பாண விவசாயிகள் அச்சத்துடனேயே வாழவேண்டியுள்ளது. வடக்கு நோக்கி மகாவலி செல்லும் போது தான் இன ஒற்றுமை உருவாக வாய்ப்பு ஏற்படும்'. என்றும் அவர் கூறினார்.

முன்னாள் அமைச்சர் அனில் முனசிங்கா பேசுகையில், வடபகுதி விவசாயிகளின் நன்மை கருதி கஙுகங்கையின் நீரை யாழ்ப்பாணம் வரை கொண்டு செல்ல முயல வேண்டும். எமது அரசு பதவியில் இருந்த போது, வடபகுதி விவசாயிகளுக்கு பல நன்மைகளைச் செய்து கொடுத்தது. அந்த விவசாயிகள் இன்று பாதிப்படைந்துள்ளனர்.

ஆகையால் பிறநாட்டு உதவிகளைப் பெற்று கஙுகங்கை நீரை வடக்குக்கு அல்லது கிழக்குக்கு திசை திருப்ப முயல வேண்டும் என்றார். (இ-3)

## தமிழரை கடத்தும் குழுக்களுக்கு பொலீஸார் பூரண ஒத்துழைப்பு

கொழும்பு, நவ. 11

கொழும்பில் தமிழர்களைக் கடத்தும்சட்டவிரோதக்குழுக்களுக்கு பொலீஸார் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாக கொழும்புப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஸ்ரீலங்காவில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களைக் கண்டித்து பிரசாரத்தில் ஈடுபடுமாறு அனைத்து நாடுகளிலும் உள்ள மனித உரிமை அமைப்புகளை சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

அரசபடைகளாலும் அரசுடன் இணைந்துள்ள சட்டவிரோதக் குழுக்களாலும் பல மனித உரிமை மீறல் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள கொழும்புப் பத்திரிகை ஒன்று —

ஜனாதிபதி, இலங்கையில் தமிழரும் சிங்களவரும் ஐக்கியமாக வாழ்கின்றனர் என்றும்—

இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல; பயங்கரவாதப் பிரச்சினையே என்றும் தெரிவித்து வரும் வேளையில், தென்னிலங்கையில் தமிழர்களின் கழுத்து நெரிக்கப்பட்டு வருகிறது எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் தமிழ் அகதிகள் தங்கியுள்ள முகாம்கள் மூடப்பட்டு, அவர்கள் இராணுவ அச்சுறுத்தலுக்குட்பட்ட பகுதிகளில் பலவந்தமாகக் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். தென்னிலங்கையில் தமிழர்கள் ஸ்ரீலங்காப் படையினராலும் சட்டவிரோத குழுக்களாலும் அதிக அளவில் கடத்தப்பட்டு வருகின்றனர்.

படையினரால் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு மிக மோசமாக நடத்தப்படுகின்றனர்.

சட்ட விரோதக் குழுக்களின் கடத்தல்கள் தீவிரமடைந்துள்ளன. இக்கடத்தல் குழுக்களின் நடவடிக்கைகளினால் தான் காணாமல் போகும் தமிழரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதற்குப் பொலீஸாரின் பூரண ஒத்துழைப்பும் உண்டு. சட்ட விரோதக் குழுக்களால் மரணப் படுகொலைகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது கொழும்பில் எந்தச் சூழ்நிலையிலும், எந்த இடத்திலும் தமிழர்கள் அரசபடையினராலோ, சட்டவிரோதக் குழுக்களினாலோ கைது செய்யப்படலாம்; கடத்தப்படலாம் என்ற நிலையே காணப்படுகிறது — என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-எ)

---

## ஐ. நா. தூதரக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய சூழ்நிலையில், ஐ. நா. தூதரகம் தனது அதிகாரிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாமல் தனது மனிதாபிமானப் பணிகளைச் செய்ய முடியும் என நம்பவில்லை என்றும் —

மடுவில் பணி புரிந்த நான்கு உத்தியோகத்தர்களும் நேற்று முன்தினம் வெளியேறி விட்டதாகவும் —

யாழ். அலுவலகத்தில் வானொலி இயக்குநர் ஒருவரே கடமை புரிவார் என்றும் — அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உணவு விநியோகம் நிறுத்தப்பட்டது

1990 ஆம் ஆண்டு நவம்பரில் இருந்து மடுவிலும் சென்ற ஆண்டு செப்டம்பரில் இருந்து பாலம்பிட்டியிலுமாக 32 ஆயிரம் அகதி மக்களுக்கு அரசு வழங்கி வந்த உணவுப் பொருள்களை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் விநியோகம் செய்து வந்தது.

இந்த முகாம்களின் நீர் விநியோகம், சுகாதார வசதி ஆகியவற்றையும் தூதரகம் கவனித்து வந்தது.

இதேவேளை, கடந்த ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் 1,611 குடும்பங்களுக்கான உலர் உணவு விநியோகத்தை அரசு நிறுத்தியதுடன், இந்த அகதிக் குடும்பங்களை இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியான வவுனியாவில் குடியேறுமாறு வலியுறுத்தியது.

இராணுவ வலயத்துக்குள் குடியேற விரும்பாத அகதி தமிழ் மக்கள் தங்களுக்கு மீளவும் உணவு நிவாரணம் தருமாறு கோரி மடுவில் உள்ள தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தி வந்தனர்.

இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தில் தமிழ் மக்களை குடியமர்த்தும் அரசின் திட்டத்துக்கு ஐ. நா. தூதரக அதிகாரிகள் மறைமுகமாக ஆதரவு அளித்து, விருப்பத்துக்கு மாறாக அவர்களை வவுனியாவுக்குள் அழைத்துச் செல்ல எடுத்த முயற்சியை ஆட்சேபித்தே மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாகப் புலிகளின் குரல் தெரிவித்தது.

ஐ. நா. தூதரகம் மக்களின் அவலத்தை உதாசீனம் செய்து அரசாங்கத்தின் சார்பான நிலைப்பாட்டை மேற்கொண்டிருப்பதாக மக்கள் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ-3)

## கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 11

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கணனி கல்வி நிறுவனங்களுடன் இணைந்து நடத்தும் கணனி இலத்திரனியல் கண்காட்சி யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் நேற்று ஆரம்பமானது.

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நேற்று முற்பகல் கண்காட்சியை தொடக்கிவைத்தார்.

முதல் நாளான நேற்று பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர். (ஒ-111-5)

## ஆஸ்பத்திரியில் கண்டெடுக்கப்பட்ட சங்கிலி

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் கிளினிக்குகளில் ஒன்றில் தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

''கிளினிக்'' நோயாளர்கள் சிகிச்சை முடிந்து சென்ற பின் இந்தச் சங்கிலியை டாக்டர் ஒருவரே கண்டெடுத்தார்.

இந்தச் சங்கிலி இப்போது ஆஸ்பத்திரி நிர்வாக உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெறலாம் என அறிவிக்கப்பட்டது. (அ-15)

---

## ஜனாதிபதியின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வயலை சல்லடை போட்டு உழுது, குண்டுகளோ அல்லது வெடிக்கும் பொருள்களோ புதைத்து வைக்கப்பட்டிருக்கின்றனவா, எனப் பரிசோதித்தது.

அவர்கள் திருப்தி தெரிவித்த பின்னரே — உழுத வயலில் — மீண்டும் ஏர் பிடித்து ஜனாதிபதி உழுதார்.

இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக தீவிரப்போக்கை ஜனாதிபதி கடைப் பிடித்து வருவதால் அவருக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்படுவதாகக் கருதப்படுகிறது. (உ-9)

## ஓய்வுபெற்ற...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும். இத்திகதிக்குப்பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு திரட்டிய சம்பள அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படும்.

★ பாதுகாப்பு வரி தொடர்ந்து அமுலில் இருக்கும்.

★ வருமானவரி எல்லை வருடத்துக்கு 89,000 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மோட்டார் கார்கள் மீதான சுங்கத்தீர்வை குறைக்கப்பட்டுள்ளது.

★ மோட்டார் சைக்கிள்கள் மீதான இறக்குமதி வரி 50 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ ஒரு வருடத்துக்கு மேலாக வெளிநாட்டில் தொழில் புரிந்து விட்டு நாடு திரும்புவோர் ஒரு மாதத்துக்குள் தீர்வையற்ற பொருள்களைக் கொள்வனவு செய்ய அனுமதியளிக்கப்படும்.

★ பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற உணவுப்பொருள்கள் மீதான மொத்த விற்பனை வரி 20 சதவீதத்தில் இருந்து 05 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. செத்தல் மிளகாய், டின் மீன் ஆகியவற்றின் மீதான வரிகளும் 10 சதவீதத்தில் இருந்து 05 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ புடைவைகள் மீதான சுங்கத்தீர்வை 100 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ வருமானவரி, மேலதிக கட்டணம் அறவிடுவது மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கும்.

★ அச்சடித்தல் மற்றும் பிரசுரங்களை வெளியிடுதல் ஆகியவற்றுக்கான மொத்த விற்பனை வரி 10 சதவீத மட்டத்துக்குக் கொண்டு வரப்படும். (ஒ-எ)

---

## யாழ். ஆஸ்பத்திரிக்குரிய அம்புலன்ஸ் தீவுப்பகுதிக்கு

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பப்படவிருந்த அம்புலன்ஸை திடீரென புங்குடுதீவு ஆஸ்பத்திரிக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக அறியவருகிறது.

யாழ். ஆஸ்பத்திரிக்கு மேற்படி அம்புலன்ஸ் விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்று முன்னர் சுகாதார, மகளிர் விவகார அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை பிரிட்டிஷ் அரசு யாழ். ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்புச் செய்திருந்த மருத்துவ உபகரணங்களில் ஒரு தொகுதியும் தீவுப்பகுதி அனுப்பப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ- 17)

## கிளாலிப் பகுதி வீட்டில் பணம், நகைகள் திருட்டு

கடந்த சனிக்கிழமை இரவு கிளாலியில் உள்ள வீடு ஒன்றில் ரூபா இரண்டு லட்சம் பெறுமதியான பணம், நகைகள், உடுப்புகள் ஆகியவை திருடப்பட்டதாக பளை காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இத்திருட்டு தொடர்பாக பளை காவல் துறையினர் துரிதகதியில் செயற்பட்டு மறுநாள் காலை திருடனையும் பணம் உட்பட சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களையும் மீட்டெடுத்தனர்.

சந்தேக நபரையும் மீட்கப்பட்ட பொருள்களையும் காவல்துறையினர் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

இது குறித்து விசாரணை செய்த நீதிமன்ற நீதியாளர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தனர். (ஒ-117)

## சாவகச்சேரி நீதிமன்றத்தில் 45 வழக்குகள் விசாரணை

தென்மராட்சி, நவ. 11

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்று ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாதங்களில் 45 குற்றவியல் வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக நீதியாளர்கள் தெரிவித்தனர்.

நீதிமன்ற நீதியாளர்கள் செல்வி சோ. கல்கி, செல்வி ல. எழில்மதி, செல்வி எம். பிரதீபா ஆகியோர் இவ்வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கினர். (ஒ-117)

## மலிவு விலையில் விற்பனை

யாழ்ப்பாணம், நவ. 11

வாதுவ கப்பலில் யாழ். ப. நோ. கூ. சங்கத்திற்கு எடுத்து வரப்பட்ட பொருள்கள் மலிவு விலையில் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெவிக்கப்பட்டது.

ஒரு கிலோ றவை 27 ரூபாவாகவும், லக்ஸ்பிறே 60 ரூபாவாகவும், லக்ஸ் சவர்க்காரம் 11 ரூபாவாவும், சன்லைற் 8 ரூபாவாகவும் தற்போது மேற்படி சங்கக்கிளைகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (ஒ-162)

## பாடசாலை உதைபந்தாட்டம்

யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று காலை 8.30 மணி முதல் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 17 வயதுப் பிரிவு :- மகாஜனா எதிர் சென். ஜோசப்.

★ 19 வயதுப் பிரிவு :- கனகரத்தினம் ம.ம.வி. எதிர் மகாஜனா.

இன்று பிற்பகல் 2 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:—

யாழ். இந்துவில்

★ 15 வயதுப் பிரிவு :- சென். ஜேம்ஸ் ம.வி. எதிர் சென். ஹென்றீஸ்.

★ 17 வயதுப் பிரிவு :- சென். ஜேம்ஸ் ம.வி. எதிர் புங்குடுதீவு ம.வி.

கொக்குவில் இந்துவில்

★ 15 வயதுப் பிரிவு :- யூனியன் கல்லூரி எதிர் நெல்லியடி ம.ம.வி.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில

★ 19 வயதுப் பிரிவு :- கரவெட்டி விக்னேஸ்வரா எதிர் ஸ்கந்தவரோதயா,

நெல்லியடி ம. ம. வியில்

★ 19 வயதுப் பிரிவு :- சென் சார்ள்ஸ் ம. வி. எதிர் ஹாட்லி. (உ)

## கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 11

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு உதவுமுகமாக ''மாற்றம்'' சஞ்சிகையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கல்விக் கருத்தரங்கின் 3ஆவது அமர்வு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் அரியாலை, கொழும்புத்துறை, பாசையூர், யாழ். நகரப் பகுதி பாடசாலைகளின் பரீட்சார்த்திகள் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## பட்ஜெட்டை விமர்சிக்கும் எதிரணிப் பிரமுகர்கள்

வர்த்தகர்களைத் திருப்திப்படுத்தும் வரவு செலவுத் திட்டம் இது. விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா முன்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படும் ஆலோசனைகளை இவ்வரவு செலவுத் திட்டம் கொண்டிருக்கவில்லை என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளர் டி. எம். ஜயரத்ன கூறினார்.

ஹரோல்ட் ஹேரத்திடம் இருந்து இதனை விட வேறு எதனையும் மக்கள் எதிர்பார்க்கவியலாது என்று சுதந்திரக்கட்சிச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க கூறினார். (ஒ-எ-6)

**இயற்கை எம் உடைமை-அதை காப்பது நம் கடமை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள்

(11—11—1993)



## பிரமிலா எலிஸினி

தாளையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரான்சிஸ் வனஜா தம்பதிகளின் செல்வப் புதல்வி பிரமிலா எலிஸினியை அப்பா, மம்மி, அக்கா, அண்ணா, தொட்டப்பா, றஞ்சன், மரியகொறற்றி, அம்மப்பா, அப்பப்பா, மாமாமார், மாமிமார், பெரியசித்தி, சித்தப்பா, சின்னசித்தி, பெரியப்பப்பா, பெரியமம்மி (கொழும்பு), சின்னமம்பி, சின்னப்பப்பா, சின்னப்பா, சின்னம்மா (கனடா), ஆசையப்பா, ஆசையம்மா, குட்டியப்பா, அத்தான்மார், மச்சாள்மார், அக்காமார் அண்ணாமார், நவம் அம்மா, ஐயா, யோகம், இந்திரா சித்தி குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(27992)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னப்பா நன்னித்தம்பி

திருநெல்வேலி வடக்கு கலாசாலை வீதியைச் சேர்ந்த அன்னப்பா நன்னித்தம்பி நேற்று 10-11-93 காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை நன்னித்தம்பியின் அன்பு மனைவியும், பரமசிவம் (காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வவுனியா), பரமேஸ்வரி, ஸ்ரீதரன் (மகாவலி அபிவிருத்திச் சபை, கொழும்பு) ஆகியோரின் தாயாரும், மாணிக்கவல்லி, அமரேசன் (ஆசிரியர், செங்குந்தா இந்துக் கல்லூரி), இந்திரா ஆகியோரின் மாமியாரும், திருமதி கேமலதா ஜெயபாலன், அமலன், ஸ்ரீஸ்கந்தா, ஸ்ரீஸ்ராம், ஸ்ரீஸ்சிவகாமி, நடேஸ்குமார், சத்தியா ஆகியோரின் பேர்த்தியாரும், காலஞ்சென்ற சௌபாக்கியவதி, வள்ளியம்மை, நல்லதம்பி, பொன்னப்பா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 11 — 11 — 1993 வியாழன் காலை 9-00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும், இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. அமரேசன்,
ஆசிரியர் செங்குந்தா இந்துக் கல்லூரி,
(மருமகன்)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(27997)

## டாக்டர் வே. கிருஷ்ணராசா

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கொழும்பில் வசிப்பவருமாகிய டாக்டர் கிருஷ்ணராசா கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற உலாந்தர வேலுப்பிள்ளை — காந்திமதி ஆகியோரின் அன்பு மகனும், ரதிவதினியின் அன்புக் கணவரும், குமதினி, நிரந்தரனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வாமதேவா, பாலேந்திரா, ராஜேந்திரா, பத்மினி, புஸ்பதேவியின் சகோதரனுமாவார். ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

தகவல்:
ஆ. ந. இராமச்சந்திரன்,
மாவட்ட நீதிபதி
சாவகச்சேரி.

புலோலி கிழக்கு,
மருதங்கேணி றோட்,
பருத்தித்துறை.

(27991)

## அமுதலிங்கம் குமாரவேலு

(நியூ ஸ்ரீதர் பார் உரிமையாளர்,
ஸ்ரான்லி வீதி, யாழ்.)

அமுதலிங்கம் குமாரவேலு 10-11-93 ஆம் திகதி காலமாகிவிட்டார்.

இவர் தெய்வானையின் அன்புக் கணவரும், வடிவேல், விசுவலிங்கம், ராசலிங்கம், இளஞ்சிதம், கமலம், மனோன்மணி, சுந்தரி அமுனி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாண்டியன் (நிப்போன் பார் உரிமையாளர் — பிரதான வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள், கட்டப்பிராயிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக செம்மணி மயானத்துக்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பாண்டியன்
(மருமகன்)

பருத்தித்துறை வீதி
3 ஆம் கட்டை,
கட்டப்பிராய்.

(27999)

# அதிகாரம் இல்லையென்றால்

# மாகாண சபைகள் ஏன்?

## கலைத்து விடுங்கள் என்கிறார் சிறிமாவோ

கொழும்பு, நவ. 11

''மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் எதுவும் இல்லை என்றால் அனைத்து மாகாண சபைகளையும் கலைத்து விடுவது தானே''

எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

மாகாண சபைகளுக்கு ஆட்சி நடத்தும் அதிகாரம் வழங்கப்படவில்லை. அரசாங்கத்துக்குள் இன்னொரு அரசாங்கம் இயங்க முடியாது என அண்மையில் ஜனாதிபதி விஜேதுங்க வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கையிலேயே சிறிமாவோ இவ்வாறு சொன்னார்.

அதிகார பரவலாக்கல் நடவடிக்கையின் கீழ் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது ஜனாதிபதி அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்கிறார். அப்படியென்றால் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான தீர்வின் மீது வடக்கு — கிழக்கு மக்கள் எப்படி நம்பிக்கை வைப்பார்கள்?

மாகாண சபைக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றால் அதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை ஏன் செலவிட வேண்டும்?

இப்படி அவர் கேட்டார். (இ-9)

## ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி நெறி

7 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரை ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 15 ஆம், 16 ஆம், 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணம், வேலணை கோட்டங்களுக்கான பயிற்சி நெறி 15 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியிலும்—

மருதனார்மடம், பண்டத்தரிப்பு ஆகிய கோட்டங்களுக்கான பயிற்சி நெறி 16 ஆம் திகதி இராமநாதன் கல்லூரியிலும்—

பருத்தித்துறை கோட்டத்திற்கான பயிற்சி நெறி 17 ஆம் திகதி வட. இந்து கல்லூரியிலும்—

சாவகச்சேரி கோட்டத்திற்கான பயிற்சி நெறி 18 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும்— நடைபெறவுள்ளன. (இ-9)

## சுதந்திரப் பறவைகள்

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் உத்தியோகபூர்வ ஏடான ''சுதந்திரப் பறவைகள்'' கார்த்திகை மாத இதழ் இன்று வியாழக்கிழமையே வெளிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதழ் கடந்த செவ்வாய்க்கிழமை வெளிவரும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் சில தடங்கல்கள் காரணமாக அன்று வெளியிடப்படவில்லை. (அ)

## கிழக்கில் 1990 இல்

## காணாமற்போன 248 பேர் கொல்லப்பட்டிருக்கலாம்

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இராணுவச் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டவர்களில் 248 க்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

அன்று கைது செய்யப்பட்டவர்களில் 248 பேருக்கு இறப்பு சான்றிதழ்களை வழங்கும்படி தற்போது அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்தே அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

1990 இல் பல்கலைக்கழகத்தை சுற்றி வளைத்து அங்கிருந்த இளைஞர்கள், குடும்பஸ்தர்கள் உட்பட 248க்கும் மேற்பட்டோரை ஸ்ரீலங்கா ராணுவத்தினர் கொண்டு சென்றிருந்தனர்.

இவர்கள் பற்றிய எந்த விபரங்களும் ராணுவத்தினராலோ, அரசாங்கத்தினாலோ தெரிவிக்கப்படவில்லை.

தற்போது இந்த 248 பேருக்கும் இறப்புச் சான்றிதழ் வழங்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-த)

## நாவலர்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திரு. ஆறுமுகம் சிவநாதன் ''இறைதாள் நினைவாய்'' எனும் பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (ச)

## விஞ்ஞான தினமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான தினமும், 'அறிவியல் கதிர்' நூல் வெளியீடும் நாளை வெள்ளி முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.


க. பொ. த. (உயர்தர வகுப்பு)

வர்த்தகமும் நிதியும்

பிரத்தியேக வகுப்புக்கள்!!!

சாவகச்சேரியில்...

இராஜகிருஷ்ணர் இரகுநாதன்

A/L 1994 பகல் நேர வகுப்புக்கள்.

A/L 1994, 95 மாலை நேர வகுப்புக்கள் தனித்தனிப் பிரிவுகளாக நடைபெறுகின்றன.

★ சகல பிரிவுகளுக்கும் ஒவ்வொரு வாரமும் குறைந்தது நான்கு நாட்கள் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

★ அனுமதி, நேர அட்டவணை என்பனவற்றுக்கு தொடர்பு கொள்க.

இடம்:

ஸ்டான் பொட் (Stan Foart)

சாவகச்சேரி. (6594)



G.A.Q. - 94

(வெளிவாரி)

(யாழ் பல்கலைக்கழகம்)

[illegible]GUSITI[illegible]

HI[illegible]TORY

பாடங்களுக்கான விரிவுரைகள் ஆரம்பம்:

14 — 11 — 1993

[illegible]

உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(சி-6536)



கணனி இலத்திரனியல்

கண்காட்சி

1993 நவம்பர் 11ஆம் 12ஆம் திகதி நேர ஒழுங்குகள்

| திகதி | நேரம் | பார்வையிடுவோர் |
| --- | --- | --- |
| 11 — 11 — 93 | காலை 8.00 மணி | — கொக்குவில் இந்துக் கல்லூரி |
| | | — யாழ். இந்துமகளிர் கல்லூரி |
| | | — ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை |
| | காலை 10.00 மணி | — பண்டத்தரிப்பு கோட்ட பாடசாலைகள் |
| | பிற்பகல் 1.00 மணி | — மருதனார்மடம் கோட்ட பாடசாலைகள் |
| | மாலை 3.30 மணி | — பொது மக்கள் |
| 12 — 11 — 93 | காலை 8.00 மணி | — தனியார் கல்வி நிறுவனங்கள் |
| | | — உயர்கல்வி நிறுவனங்கள் |
| | காலை 9.00 மணி | — தென்மராட்சி கோட்ட பாடசாலைகள் |
| | பிற்பகல் 1.00 மணி | — வேம்படி மகளிர் கல்லூரி |
| | | — வடமராட்சிக் கோட்ட பாடசாலைகள் |
| | மாலை 3.00 மணி | — ஏனைய பாடசாலைகள் |
| | | — பொது மக்கள் |

இந்த நேரசூசிக்கு ஏற்ப சகலரையும் ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். ரிக்கற்றுக்களை கண்காட்சி முகப்பில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரவேசம் ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-

நன்றி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(சி-6349)



அரிய சந்தர்ப்பம்!

தீபாவளி மலிவு விற்பனை

நவம்பர் 1 ஆம் திகதி முதல்
12 ஆம் திகதி வரை

சகலவிதமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
முதலியன மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

அல்டி

269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6519)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 06 — 02 — 1942

மறைவு: 28 — 09 — 1993

## திருமதி செல்லையா பரமேஸ்வரி

பிறப்பவர் யாவரும் இறப்பது உண்மை
என்ற தத்துவம் எமக்குத் தெரியும்
ஆனால் அம்மா! அரக்கரின் கொடுமை
அழித்தது உங்கள் உயிரை
அகால மரணம் அடைந்தீர் அன்று!
பிள்ளைகள் மூவரையும் பிரிந்து
ஆறாத்துயரில் ஆழ்கின்றோம் இன்று உங்களை —
நினைந்து

ஆனால் அம்மா! உங்கள் விருப்பம்
பூர்த்தி செய்வோம்! இது சத்தியம்!
அந்த அரக்கனை அழிப்போம் என்றோ ஒரு நாள்!


அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம் என்றும்;

உங்கள் பிரிவால் துயருறும்;
- பிள்ளைகள்.

சரசாலை,
சாவகச்சேரி.

(6589)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 13 — 01 — 1964

மறைவு: 13 — 10 — 1993

## தர்மரெட்ணம் அரவிந்தநாதன்

(சிவா)

எங்கள் குலவிளக்கான த. அரவிந்தநாதனின் (சிவா) நினைவஞ்சலியும், அந்தியேட்டிக் கிரியையும் 11-11-93 வியாழக்கிழமை காலை வில்லூன்டியிலும், சபிண்டீகரணக்கிரியை 12-11-93 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரது மறைவின்போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பலவழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்:
சாமிஅம்மா குடும்பத்தினர்
மணற்தறை அம்மன்

28/5, மணற்தறை லேன்,
கந்தர்மடம்.

(28000)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-11-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: இரண்டு

Registered as a Newspaper

விசேட பதிப்பு

# உதயன்

விலை ரூபா 3-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 26 வியாழக்கிழமை (11 — 11 — 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 348

# பூநகரி புலிகள் வசம் வீழ்ந்தது!

# 200க்கு அதிக படையினர் பலி!!

## இராணுவ முகாம்கள், கடற்படைத் தளங்களை கைவிட்டு படையினர் நிலைகுலைந்து தப்பி ஓட்டம்

யாழ்ப்பாணம், நவம்பர் 11

சங்குப்பிட்டித் துறையிலிருந்து பூநகரி வரையான பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினர் மீது இன்று அதிகாலை முதல் விடுதலைப் புலிகள் நடத்திய அதிவேக அதிரடித் தாக்குதலில் பூநகரியின் பெரும் நிலப்பரப்பு புலிகள் வசம் வீழ்ந்தது. இருநூறுக்கும் அதிகமான படையினர் பலியாகினர். மேலும் பலர் காயமுற்றனர்.

அப்பகுதியிலிருந்த இராணுவ முகாம்கள், கடற்படைத் தளங்கள் ஆகியவற்றைக் கைவிட்டு படையினர் நிலை குலைந்து தப்பி ஓடினர்.

பூநகரியில் இருந்த இராணுவம் மற்றும் கடற்படைத் தளங்கள் இரண்டும் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்தன என்பதை இன்று காலையே பி.பி.ஸி. அறிவித்தது.

இத்தாக்குதலில் இருநூறுக்கும் அதிக படையினர் உயிரிழந்தனர் என்றும் பி.பி.ஸி. அறிவித்தது.

ஆனால் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை இதற்கு அதிகமாக இருக்கும் என யுத்தமுனைச் செய்திகள் தெரிவித்தன.

மேஜர்கள், கப்டன்கள் உட்பட பல இராணுவ அதிகாரிகளும், கடற்படையினரும் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர்.

ஏழு மணித்தியாலங்கள் நடைபெற்ற தாக்குதலைத் தொடர்ந்து படையினர் முகாமைவிட்டு ஓடினர் என்று கொழும்புத் தகவல்களை மேற்கோள்காட்டி சர்வதேச

(2ஆம் பக்கம் பார்க்க)

## படையின் நீருந்து விசைப்படகு கடற் கரும்புலியால் தகர்ப்பு

பூநகரி இராணுவ முகாம் மீதான தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது படையினருக்கு உதவ கடல் மார்க்கமாக வந்து கொண்டிருந்த கடற்படையின் நீருந்து விசைப்படகு (வோட்டர் ஜெற்) ஒன்று கரும்புலித் தாக்குதலில் தகர்க்கப்பட்டது.

மற்றொரு நீருந்து விசைப்படகும் சேதமுற்றது.

இத்தாக்குதலை அடுத்து உதவிக்கு வந்த படையினரின் மற்றைய விசைப்படகுகள் வந்த வழியே திரும்பித் தப்பி ஓடின.

கடற்கரும்புலி கோபி என்ற போராளியே கடற்படையின் நீருந்து விசைப்படகைத் தகர்த்து வீரச்சாவடைந்தார்.

முன்னைய யுத்த களம் ஒன்றில் ஒரு காலில் காயமுற்று ஊனமடைந்த நிலையில் அவர் இந்த வீரசாதனையைப் புரிந்ததாக முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## ஆறு படகுகளை கடற்படை இழந்தது

பூநகரித் தாக்குதலின் போது கடற்படையின் ஆறு படகுகளையும் புலிகள் கைப்பற்றியிருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

## பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் வசம்!

பூநகரிப் பகுதியை புலிகள் கைப்பற்றியதை அடுத்து அப்பகுதிகளில் அமைந்திருந்த படையினரின் ஆயுதக் களஞ்சியங்கள் அனைத்தும் புலிகள் வசம் வீழ்ந்தன.

நவீன ரக ஆயுதங்கள், குண்டுகள், வெடி மருந்துகள், டாங்கிகள் மற்றும் இராணுவ வாகனங்கள் ஆயுதத் தளபாடங்கள் ஆகியவற்றை ஆயுதக் களஞ்சியங்களோடு புலிகள் அள்ளிச் சென்று கொண்டிருப்பதாக பி.பி.ஸி. இன்று மதியம் அறிவித்தது.

ஐம்பது கலிபர் துப்பாக்கிகள் பத்துக்கு அதிகமாக விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பல நவீன துப்பாக்கிகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## புலிகளின் வியூகத்தில் 100 படையினர் சிக்கினர்?

பூநகரி முகாம் பகுதியில் இருநூறுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தது போக— தப்பியோடிய சுமார் நூறு படையினர்— பூநகரிக்கு அருகே சிறுநகரப் பகுதி ஒன்றில் புலிகளின் சுற்றி வளைப்புக்குள் சிக்குண்டு போயிருப்பதாகச் செய்தி ஏஜென்ஸி ஒன்று இன்று நண்பகலில் அறிவித்தது.

அவர்களை சுற்றிவளைத்து புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாகவும் இன்று நண்பகல் தெரிவிக்கப்பட்டது.

இவர்களைத் தவிர மற்றும் பல படையினர் புலிகளிடம் உயிருடன் பிடிபட்டிருக்கக் கூடும் என்றும் கருதப்படுகிறது.

## முச்சந்தி புரவி




புதிய சரித்திரம் படைச்சிருக்கு

## வலைப்பாடு துறையில் துருப்புக்கள் இறக்கம்!

யாழ்ப்பாணம்; நவ. 11

பூநகரி இராணுவ முகாம் பகுதி புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து மன்னார் மற்றும் தீவுப் பகுதிகளில் இருந்து மேலதிக படையினர் கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்டு இறங்கு துறையூடாக தரையிறக்கப்பட்டனர். இவர்கள் அதிகாலை கடற்படை படகுகளின் உதவியுடன் வலைப்பாடு பகுதியில் தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தரையிறக்கப்பட்ட படையினருடன் இன்று முற்பகல் வரை விடுதலைப் புலிகள் கடுஞ்சமர் புரிந்ததாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(உ-5)

## தென்மராட்சி விசேட தளபதி உட்பட 10பேர் வீரச்சாவு

### அவர்களில் ஐவர் கடற்புலிகள்

யாழ்ப்பாணம், நவ. 11

பூநகரி இராணுவ முகாம் மீதான பெரும் அதிரடித் தாக்குதலில் தென்மராட்சி பகுதி விசேட தளபதி குணா மற்றும் முன்னணிப் போராளி குட் உட்பட 10 போராளிகள் வரை வீரச்சாவடைந்ததாக இன்று காலை முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இவர்களில் ஐவர் கடற்புலிகள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-5)

## படைக்கு பாரிய அழிவு; தளபதிகள் வர்ணிப்பு

பூநகரி முகாமை கைப்பற்றுவதற்கு விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பை ''பாரிய அழிவுச் சம்பவம்'' என்று இராணுவத் தளபதிகள் கொழும்பில் வர்ணித்தனர்.

1990 ஜூனில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையேயான சண்டை மீண்டும் ஆரம்பமானதன் பின்னர் இராணுவம் சந்தித்த பேரழிவு (Debacle — Disaster) இதுவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சிரேஷ்ட தளபதிகள் வடக்கே விரைவு!

பூநகரித் தாக்குதல் சம்பவத்தை அடுத்து சிரேஷ்ட இராணுவத் தளபதிகள் கொழும்பிலிருந்து வட பகுதிக்கு விரைந்துள்ளனர் என்று பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவித்தார்.

தாக்குதலில் உயிரிழந்த படையினரின் சடலங்களையும் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த கேந்திர படை முகாமையும் திருப்பி எடுப்பதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் சிரேஷ்ட படைத் தளபதிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது.

(உ-எ)

## சிங்களவர் அதிர்ச்சி! படை மீது ஆத்திரம்!!

பூநகரியை விடுதலைப் புலிகளிடம் படையினர் இழந்துள்ளது குறித்து தென்பகுதியில் உள்ள மக்கள் அதிர்ச்சி அடைந்திருப்பதாக பி. பி. ஸி. அறிவித்தது.

விடுதலைப் புலிகள் ஒரு சக்தியற்ற அமைப்பு என்று இராணுவத்தினர் கூறி வந்ததற்காக இப்போது இராணுவத்தினர் மீது தென்பகுதி மக்கள் ஆத்திரம் கொண்டிருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் ஒன்றரை மணிநேரத்தில் 4 முகாம்களை நிர்மூலமாக்கினர்!

விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல் பிரிவு இன்று (வியாழன்) அதிகாலை 1.30 மணிக்கு, ஞானிமடத்தில் இருந்து ஆலடி வரை அமைக்கப்பட்டிருந்த நான்கு இராணுவ முகாம்கள் மீது ஒரே நேரத்தில் சமகாலத் தாக்குதல் நடத்தியது.

அந்தத் தாக்குதல் அதிகாலை 3 மணி வரை நீடித்தது. ஒன்றரை மணி நேரத்தில் விடுதலைப் புலிகள் நான்கு இராணுவ முகாம்களையும் நிர்மூலமாக்கினர். பெரும் எண்ணிக்கையான சிப்பாய்கள் கொலையுண்டனர். சிப்பாய்களில் பலர் தப்பியோடினர்.

விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல் தொடங்குவதற்கு சுமார் மூன்று மணித்தியாலங்களுக்கு முன்னரே— அதாவது இரவு 10-30 மணியில் இருந்தே— சங்குப்பிட்டி துறைமுகப் பகுதியில் இருந்து கடற்படையினர் தொடர்ச்சியாகப் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

அந்தக் கடும் பீரங்கித் தாக்குதலின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் தமது அதிரடியைத் தொடர்ந்து நடத்தி நான்கு முகாம்களையும் வீழ்த்தினர்.

விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தபோது இராணுவத்துக்கு உதவியாக கடற்படையினர் கடும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர். விமானப் படையினரும் புக்காரா, பொம்மர்கள், ஹெலிக்கொப்டர்கள் கொண்டு கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அதிகாலை 3 மணிக்கு புக்காரா விமானம் ஒன்று பேரிரைச்சலுடன் அப்பகுதியை வட்டமிட்டு தாக்குதல் நடத்தியது. மூன்று பொம்மர் விமானங்களும், ஹெலிகளும் மாறி மாறி இடைவிடாது குண்டுகளையும், றொக்கெட்டுகளையும், கிரேனேட்டுக்களையும் வீசின.

ஆனையிறவு இயக்கச்சி முகாம்களில் இருந்தும் பூநகரிப் பகுதியை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

காலையில் பள்ளிக்குடா கடற்பிராந்தியத்தில் இருந்து இரண்டு பீரங்கிப் படகுகளும் பூநகரிப் பகுதியை நோக்கி தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திய வண்ணம் இருந்தன.

இதேவேளை இன்று காலை 9 மணியளவில் இந்த இரண்டு பீரங்கிப் படகுகளில் இருந்தும் புகை வெளியே வந்து கொண்டிருந்ததாகவும், கடற்புலிகளின் தாக்குதல்களால் அவை சேதமடைந்திருக்கலாம் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

பூநகரிப் பகுதித் தாக்குதல்களின் எதிரொலியாக அரியாலைப் பந்தலடியில் நேற்றுக் காலை 6 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. கரையோரமாக தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்கள் காயம் எதுவுமின்றித் தப்பினர். (அ-15-3-5-9)

## இராணுவ உயர் பீடம் நிலைகுலைந்துள்ளது

பூநகரிப் பிரதேசம் புலிகள் வசம் வீழ்ந்ததை அடுத்து இராணுவ உயர்பீடம் நிலைகுலைந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

பூநகரியில் எப்பிரதேசத்தில் புலிகள் நிலை கொண்டிருக்கிறார்கள்? தப்பிய படையினர் எங்கு தஞ்சம் புகுந்துள்ளனர்? — என்பது தெரியாததால் இராணுவ உயர்பீடம் விமான, கடல் வழித்தாக்குதல்களை தொடராமல் இடைநிறுத்தி வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தாக்குதல் குறித்து விசாரிக்க ஆணைக்குழு நியமனம்?

பூநகரி முகாம் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் புகுந்தது எப்படி? படை முகாம்களுக்கு உண்மையில் என்ன நடந்தது? மேஜர்கள், கப்டன்கள் போன்ற இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டது எப்படி?— என்பவை குறித்து ஆராய ஆணைக்குழு ஒன்றை அரசு நியமிக்கும் என கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்று இன்று அதிகாலை அறிவித்தது.

இதற்கு முன்னரும் ''ஜானகபுர'' தாக்குதலில் 60 முதல் 70 படையினர் கொல்லப்பட்டது குறித்து ஆராய விசாரணைக்குழு ஒன்றை அரசு நியமித்தது என்றும்—

ஆனால் எதிர்பார்க்கப்பட்ட தகவல்கள் ஏதும் அந்தக் குழுவின் விசாரணைகளில் வெளிவரவில்லை என்றும்—

அந்த செய்தி ஏஜென்ஸி குறிப்பிட்டது. (உ-3)

## மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், நவ. 11

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் அதிரடித் தாக்குதலை அடுத்து சாவகச்சேரி, உட்பட தென்மராட்சியின் சில பகுதிகளில் இருந்து இன்று அதிகாலை முதல் மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்ந்தனர். இதனால் இன்று தென்மராட்சிப் பகுதியில் பதற்றம் நிலவியது

பூநகரிப் பகுதியில் இடம்பெற்ற விமான மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் புதன் நள்ளிரவு முதல் இன்று காலை வரை தென்மராட்சி பகுதிகள் அதிர்ந்தபடி இருந்தன. யாழ். நகரப் பகுதியும் கூட அதிர்ந்தது.

விமானப் படை அகோரக் குண்டுத் தாக்குதலை நடத்திய படி இருந்ததால் கேரதீவுப் பாதையில் தனங்கிளப்புக்கு அப்பால் செல்ல முடியாத நிலை இன்று முற்பகல் வரை நிலவியது. ஹெலிகளும், பொம்மர்களும், சுப்பசொனிக் விமானங்களும் மாறி மாறி தாக்குதலை நடத்தியபடி இருந்தன. (ஒ-5)

## இராணுவத் தளபதி திண்டாட்டம்

சண்டை நடைபெறும் பகுதிக்குச் செல்ல இராணுவத் தளபதி முயற்சித்த போதிலும் —

கடும் சண்டை காரணமாக அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாது அவர் திண்டாடிக் கொண்டிருப்பதாக பி.பி.ஸி. இன்று நண்பகலில் அறிவித்தது. (உ-எ)

## பவள்கள் உட்பட வாகனங்கள் பல புலிகள் வசம்

இன்று அதிகாலை பூநகரியில் புலிகள் நடத்திய தாக்குதலின்போது ''பவள்'' கவச வாகனங்கள் இரண்டு உட்பட பல இராணுவ வாகனங்கள், கடற்படைப் படகுகள் ஆகியவையும் புலிகள் வசம் வந்ததாக தெரியவந்தது.

## ஆஸ்பத்திரியில் இரத்தம் வழங்க முண்டியடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

பூநகரி இராணுவ முகாம் தாக்கப்பட்டதை அடுத்து காயமடைந்தவர்களுக்கு இரத்தம் வழங்க யாழ். ஆஸ்பத்திரியில் இன்று முற்பகல் பலர் முண்டியடித்தனர்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி உட்பட பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் தாமாகவே முன்வந்து இரத்தம் வழங்கினர். (உ-5)

## தாக்குதல் செய்தி: சர்வதேச ரீதியில் முக்கியத்துவம்

யாழ்ப்பாணம், நவ. 11

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல் பற்றி சர்வதேச செய்தி நிறுவனங்கள் இன்று முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டன. பி.பி.ஸி., வொய்ஸ் ஒவ் அமெரிக்கா, ஆஸ்திரேலிய வானொலி மற்றும் இந்திய வானொலி என்பன தாக்குதல் தொடர்பான செய்திகளை வெளியிட்டபடி இருந்தன.

இராணுவத்துக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் இழப்புக்களை செய்தி ஏஜென்ஸிகள் பெரிதாக விமர்சனம் செய்தன. (உ-5)

## போக்குவரத்து பாதையும் புலிகளிடம்

சங்குப்பிட்டி — கேரதீவு ஊடாக பூநகரிக்கு செல்வதற்கான போக்குவரத்துப் பாதை முற்றாக புலிகளின் கட்டுப்பாட்டில் வந்திருப்பதாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பூநகரிப் பகுதி முற்றாக புலிகள் வசம் வீழ்ந்திருப்பதாக பி.பி.ஸி. குறிப்பிட்டது.

---

உள்ளூராட்சித் தேர்தல்:

# கொழும்பு தமிழ்க் கட்சிகள் குழுக்களிடையே வேறுபாடு

கொழும்பு, நவ. 11

ஜனாதிபதி கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவின் பகுதிகளிலும் நடத்தப் போவதாக அறிவித்துள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் பற்றி கொழும்புத் தமிழ்க்கட்சிகளும் தமிழ்க் குழுக்களுக்கும் இடையில் பலமான கருத்து வேற்றுமைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் அல்லது வடக்கு-கிழக்கு மாகாணத்தை நிர்வகிக்க இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனத் தமிழ்க் கட்சிகள் தொடர்ந்து அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றன.

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் அரசியல் தீர்வொன்றை முன்வைக்காத நிலையில் அரசாங்கம் நடத்தும் உள்ளூராட்சித் தேர்தல்களில் எப்படிக் கலந்து கொள்ள முடியும்? ஆகையால் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் சில கருதுகின்றனவாம்.

தமிழ்க் கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தல்களை பகிஷ்கரித்தால் ஆளும் கட்சி உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றிவிடும். ஆகையால் உள்ளூராட்சித் தேர்தல்களை ஏனைய தமிழ்க்கட்சிகள் பகிஷ்கரித்தாலும் அதில் நாம் போட்டியிடுவோம் என பாதுகாப்புப் படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க் குழுக்கள் கருதுகின்றன என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-க)

## இடம் பெயர்ந்தோருக்கான பாடசாலை உபகரணங்கள

### யுனிசெவ் தொடர்ந்து வழங்கும்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்.மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதிகளை தொடர்ந்து வழங்குவதாக யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 12 வரையான மாணவர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்படும். அவை அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக விநியோகிக்கப்படும்.

ஏற்கனவே 'யுனிசெவ்' நிறுவனம் 6ஆயிரத்து 873 உபகரணப் பொதிகளை வழங்கியிருந்தது. அவை இடம் பெயர்ந்தோர் முகாம்களைப் பராமரிக்கும் நிறுவனங்கள் ஊடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையச் செயலாளர் தெரிவித்தார். (இ-5)

## மு. க. சார்பில் வழக்கறிஞர்

சென்னை, நவ. 11

ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமான சதித்திட்டம் குறித்து விசாரணை நடத்தும் ஜெயின் ஆணைக்குழுவின் முன், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் சார்பில் வழக்கறிஞர் ஒருவர் தெரிபடுவார்.

இம் மாதம் 16 ஆம் திகதி விசாரணை மீண்டும் ஆரம்பமாகும்போது தமது வழக்கறிஞர் சமுகமளிப்பார் என்று திரு. கருணாநிதி கோவையில் செய்தியாளர்களிடம் கூறினார். (ஒ-எ)

---

பூநகரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

சண்டை இன்று முற்பகல் வரை தொடர்ந்து இடம் பெறுவதாகத் தெரியவந்தது.

## பாஷையூரில் ஷெல்! இருவர் மரணம்!!

### மற்றும் இருவர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 11

ஊர்காவற்றுறையிலிருந்து இன்று பிற்பகல் 2 மணி முதல் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் பாஷையூரில் தாயும், மகனுமாக இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

மற்றும் இருவர் காயமடைந்தனர்.

கிருஷாந்து மலர்ராணி (வயது 43), அவரது மகனான ஜேசுராஜன் (வயது 5) ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

உயிரிழந்த மலர்ராணியின் சகோதரி சூசைதாஸ் புஷ்பராணி (வயது 46), அவரது கணவர் தேவசகாயம் சூசைதாஸ் (வயது 48) ஆகிய இருவரும் காயமுற்றனர்.

இராணுவ முகாம்களில் இருந்து இன்று பகல்வேளை படையினர் யாழ். நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தியபடி இருந்தனர்.

சில ஷெல்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் விழுந்து வெடித்துள்ளன. சேதவிவரங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை.

இதனால் மக்கள் பதற்றத்துடன் காணப்பட்டனர். (உ-15)

---

## ஒரு தொகுதி படையினருக்கு மாதகலில் தீவிர பயிற்சி?

படைகளுக்கு திரட்டப்பட்டவர்களில் ஒரு தொகுதியினருக்கு மாதகல் பகுதியில் தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த மாதங்களில் படையில் சேர்க்கப்பட்டவர்கள் உடனடியாக வடக்கு-கிழக்கு யுத்த முனைக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

யாழ். மாவட்டத்துக்கு இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் ஒரு தொகுதியினருக்கு மாதகல் பகுதியில் மூன்று இடங்களில் வைத்து தீவிர பயிற்சி அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

காலை முதல் இரவுவரை துப்பாக்கி சூட்டுச் சத்தங்கள் கேட்டபடி உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (த-3)

## ஐ. தே. க. உறுப்பினராக அனுரா பதவிப்பிரமாணம்

கொழும்பு, நவ. 11

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக திரு. அனுராபண்டார நாயக்காவும் சுதந்திரக் கட்சி உறுப்பினராக திரு. யு. எஸ். அழகக்கோனும் இன்று காலை சபாநாயகர் எம். எச். முகம்மது முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

வரவு செலவுத் திட்ட ஆலோசனைகள் மீதான விவாதம் இன்று காலை நாடாளுமன்றில் ஆரம்பமாவதற்கு முன்னர் இப்பதவிப் பிரமாணங்கள் இடம் பெற்றன.

அனுரா பண்டார நாயக்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமா செய்ததை அடுத்து அவரின் இடத்துக்கு அழகக்கோன் நியமிக்கப்பட்டார் என்பது தெரிந்ததே. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org